சார்பு நீதிமன்றம், விருதுநகர்

I.A. 2/2022 in Date:08.12.2023
H.M.O.P..No. 113 /2022

மனுதாரர் தரப்பு சாட்சி-1 ன் வாக்குமூலம் (1872ம் ஆண்டு சாட்சிய சட்டம் 144 வது பிரிவின்படி திரு.M.ஆறுமுகம், கிரேடு 2 பெஞ்ச் கிளார்க் என்பவரால் ஆணையிட்டு சத்தியபிரமாணம் செய்து வைக்கப்படுகிறது)

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | சண்முகசுந்தரம் | சாதி | : | - |
| த/பெ | : | செந்தில்ஆறுமுகம் | சமயம் | : | - |
| கிராமம் | : | தூத்துக்குடி | தொழில் | : | |
| தாலுகா | : | தூத்துக்குடி | வயது | : | 50 |

முதல் விசாரணை

நான் வருமான வரித்துறையில் ஆய்வாளராக தூத்துக்குடியில் பணிபுரிந்து வருகிறேன். எனக்கு நீதிமன்றத்தில் இருந்து அழைப்பாணை வந்ததின் பேரில் சாட்சியம் அளிக்க வந்துள்ளேன். மேற்படி அழைப்பாணையில் தூத்துக்குடியை சேர்ந்த கார்த்திக் மாரிமுத்து என்பவரின் 2019-2022 வரையிலான வருமான வரி மற்றும் படிவங்கள் மற்றும் அதனுடன் இணைத்து தாக்கல் செய்த ஆவணங்களை தாக்கல் செய்து சாட்சியம் அளிக்கும்படி சொல்லப்பட்டிருந்தது. அதற்காக எனக்கு கொடுக்கப்பட்ட அதிகார ஆவணம் **சா.சா.ஆ.1** ஆகும். 2019-2020 வரையிலான கார்த்திக்குமார் என்பவரின் வருமான வரிகணக்கு படிவத்தை கொண்டு வந்துள்ளேன். அதில் அவருக்கு சொந்தமான சொத்தில் இருந்து வந்த வருமானத்திற்கும், வங்கியில் இருந்து வரப்பெற்ற வட்டி (இதர வருமானம்) வருமான வரி செலுத்தியதாக சொல்லப்பட்டுள்ளது. அவருக்கு

கதவு எண். 19 WGC ரோடு மற்றும் கதவு எண். 19A, கதவு எண். 19B, தூத்துக்குடி ஆகியவற்றில் இருந்து வருமானங்கள் முறையே ரூ.78021/-, ரூ.91787/-, ரூ.49420/- வருமானங்கள் வந்துள்ளதாக அதில் சொல்லப்பட்டுள்ளது. அந்த வருடத்திற்கு வரி எதுவும் செலுத்தப்படவில்லை. அவருக்கு இதர வருமானமாக ரூ. 52837/- ஈட்டியதாக சொல்லப்பட்டு அதற்கு வரி செலுத்தப்பட்டுள்ளது. கார்த்திக் மாரிமுத்து என்பவரின் 2019-2020 ஆண்டிற்கான வருமான வரி படிவம் **சா.சா.ஆ.2** வரிசை (67 பக்கம்) ஆகும். 2020-2021ம் ஆண்டிற்கு கதவு எண். 19 WGC ரோடு மற்றும் கதவு எண். 19A, கதவு எண். 19B, தூத்துக்குடி ஆகியவற்றில் இருந்து வருமானங்கள் முறையே ரூ.70,873/-, ரூ.91,846/-, ரூ.53,538/- வருமானங்கள் வந்துள்ளதாக அதில் சொல்லப்பட்டுள்ளது. அவருக்கு இதர வருமானமாக ரூ. 29,356/- வந்துள்ளது. அதற்கு வருமான வரி ரூ.32,314/- செலுத்தப்பட்டுள்ளது. 2020-2021ம் ஆண்டிற்கான வருமான வரி படிவம் **சா.சா.ஆ.3** வரிசை (66 பக்கம்) ஆகும். 2021-2022ம் ஆண்டிற்கான கதவு எண். 19 WGC ரோடு மற்றும் கதவு எண். 19A, கதவு எண். 19B, தூத்துக்குடி ஆகியவற்றில் இருந்து வருமானங்கள் முறையே ரூ.1,00,544/-, ரூ.9,569/-, ரூ.1,55,409/- வருமானங்கள் வந்துள்ளதாக அதில் சொல்லப்பட்டுள்ளது. அவருக்கு சம்பளமாக ரூ. 6,45,098/- கிடைத்துள்ளதாகவும், அதில் மொத்த சம்பளம் ரூ.8,37,498/- என்று காட்டப்பட்டுள்ளது. அவருக்கு இதர வருமானமாக ரூ.24,879/- வந்துள்ளது. அதற்கு வருமான வரி ரூ.52,581/- செலுத்தப்பட்டுள்ளது.

நான் தாக்கல் செய்துள்ள 2021–2022ம் ஆண்டிற்கான வருமான வரி படிவம் **சா.சா.ஆ.4** வரிசை (72 பக்கம்) ஆகும். வருமான வரி செலுத்துவதற்கு வருமான வரி செலுத்தும் நபர் வருமானம் வருவதை காட்டுவதற்கான ஆவணங்கள் இணைத்து தான் படிவங்கள் தாக்கல் செய்வார்கள் என்றால் தற்சமயம் இணையதளம் வாயிலாக பதிவு செய்வதால் ஆவணங்கள் எதுவும் தாக்கல் செய்யவில்லை. இணையதளத்தில் படிவங்கள் வாயிலாக குறிப்பிடப்படும்.

எதிர்மனுதாரர் தரப்பு வழக்கறிஞரின் வேண்டுகோளுக்கிணங்க குறுக்கு விசாரணை மற்றொரு தேதிக்கு ஒத்தி வைக்கப்படுகிறது.